# காந்தி நினைவு தின போட்டிகள்

கும்மிடிப்பூண்டி, பிப். 1-

மகாத்மா காந்தி நினைவு தினத்தை முன்னிட்டு, இளைய தலைமுறையினருக்கு காந்தியின் எண்ணங்கள் மற்றும் கொள்கைகளை நினைவுபடுத்தும் வகையில் 'காந்தி வேர்ல்ட் பவுண்டேஷன்' சார்பில் பள்ளி மாணவ, மாணவியரிடையே ஓவியம் மற்றும் கேள்வி பதில் போட்டிகள் நடத்தப்பட்டது.

கும்மிடிப்பூண்டி அடுத்த, புதுகும்மிடிப்பூண்டியில் நடந்த இப்போட்டிகளில், 150க்கும் மேற்பட்ட பள்ளி மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர்.

அமைப்பின் நிறுவனர் ராஜேஷ் தலைமையில் நடந்த விழாவில் நிர்வாகிகள், விஜயலட்சுமி, திலீப் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியருக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. ஆயிரத்துக்கும் மேற்பட்ட காந்தியின் அரிய புகைப்படங்கள், பிற நாடுகளில் வெளியிடப்பட்ட காந்தியின் தபால் தலைகள், மாணவ, மாணவியரின் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது.




புதுகும்மிடிப்பூண்டியில் நடந்த, மகாத்மா காந்தி நினைவு தின ஓவிய போட்டியில், ஆர்வமுடன் கலந்து கொண்டு ஓவிய திறனை வெளிபடுத்தும் மாணவி.